முருகப்பெருமான் துணை

**மகான் திரிகோணசித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.07.2023, புதன்கிழமை

1. மகாயோக ஞான வழிகளை
   மகத்துவம் கூட்டி உலகோர்
   வகையாக அடைய வேண்டி
   வள்ளலாய் அருளும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
   அகிலமதில் சோபகிருது மிதுனதிங்கள்
   வரங்களென இருபானேழ்திகதி புந்திவாரம்
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 27ம் நாள், 12.07.2023, புதன்கிழமை)
   வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை திரிகோணசித்தர் யானும்
   அருளுவேன் உலக நலம்பெற
   வாசிவென்ற சக்தி மிக்கநல்
   வள்ளல்களை உருவாக்க வந்த
4. வந்தநல் ஞான தேசிகனே
   வழிமொழிந்து உன் வேதங்களை
   சிந்தைவைத்து வரும் மக்களுக்கு
   சித்திமிகு ஞானங்கள் தேறி
5. தேறியே பொறிபுலன் அடக்கம்
   தெளிவு திடம் தயவுநெறியும்
   அறிவுடன் தரும ஆற்றலும்
   அளவிலா வரமாக அரங்கன்ஆசியால்
6. ஆசியால் கிட்டி உலகோர்
   அற்புதம் பல அடைவர்
   வாசிதனை வேலவன் நடத்த
   வகைதனை அடைந்த மக்களாக

7. ஆகவே அனைவரும் தேறி
அறிவிக்க அரங்கன் வழி
செகத்தில் ஞானிகளாவர்
செப்பிடுவேன் ஞானப்படைகளாக

8. ஆகவே தொண்டர் படைகள்
அளவிலா அகிலம் முழுக்க
வகைபட மிகையாய் பெருகி
வையகத்தையே மாற்றும் வல்லமை

9. வல்லமை கண்டு கலியின்
வதைகளை எல்லாம் விரட்டி
கல்லாமை இல்லாமை வறுமை
கயமை அத்தனையும் அகற்றி

10. அகற்றியே உலகை ஞானவழி
ஆளுமையாக மாற்றி நன்கு
யுகமாற்றமே புரிந்து சிறந்த
உண்மை நிறைந்த ஞானஆட்சி

11. ஆட்சிபடைத்து உலகமெல்லாம்
ஆறுமுகனார் வெளிப்படவே
மாட்சிமை பல புரிந்திடுவர்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—